இப்புத்தகம் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் குறைந்த விலைக்கு விற்கப்பெறுகிறது.

உ

சிவமயம்.

மாட்சிமை தங்கிய மதுரையம்பதியில் எழுந்தருளியிருக்கும் சாக்ஷாத் சொக்கலிங்கப் பெருமான் செய்தருளிய அறுபத்துநான்கு திருவிளையாடல்களுள், முதலாவது

# இந்திரன்பழி தீர்த்தது.



இது

மதுரைச் சிவனடியார் திருக்கூட்டத்தாரால்

மதுரை மீனலோசனி அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப் பெற்றது.

(ரிஜிஸ்டர்டு காப்பிரைட்.)

1923.

இந்தப் புத்தகம் மதுரை தெற்குக் கோபுர வாசல் தெரு, மீனலோசனி அச்சாபீஸில் பெற்றுக்கொள்ளலாம்.

உ

சிவமயம்.





# திருவிளையாடற் புராணம்

## முதலாவது

# இந்திரன் பழிதீர்த்த படலம்.

திங்களணி திருவால வாயெம் அண்ணல்
        திருவிளையாட் டிவையன்பு செய்து கேட்போர்
சகங்கநிதி பதுமநிதிச் செல்வம் ஓங்கித்
        தகைமைதரு மகப்பெறுவர் பகையை வெல்வர்
மங்கலநல் மணம்பெறுவர் பிணிவந் தெய்தார்
        வாழ்நாளும் நனிபெறுவர் வானு டெய்திப்
புங்கவராய் அங்குள்ள போகம் மூழ்கிப்
        புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார்.

கிரேதாயுகத்திலே தெய்வலோகத்திலே தேவேந்திரனானவன் ஒருநாள் தேவமாதர்கள் நடனஞ்செய்யக் கண்டும், அமுதம் போன்ற பாடல்களைக் கேட்டும் ஆனந்தக் கடலில் மூழ்கினான். அந்தச்சமயத்தில், பரமசிவனை யொத்த, தமது குருவாகிய வியாழ பகவான் வந்தனர்; அவருடைய திருவடிகளுக்கு வழிபாடு செய்யாமல் தேவேந்திரன் இருந்தான். அதையறிந்து குருவானவர் போய்விட, தேவேந்திரனுடைய செல்வமானது குறைய, இக்கெடுதியானது உயர்வாகிய குருவை வழிபடாத குற்றத்தினால் உண்டாயிற்றென்று துன்பமுற்று, குருவை எங்குந்தேடிக் காணாதவனாகி, பிரம

லோகஞ் சேர்ந்தான். அங்குந்தேடிக் காணாததினால் பிரமதேவரைத் தொழுது வணங்கித் துதித்து தனக்கு ஏற்பட்ட துன்பத்தின் வரலாறெல்லாம் விவரமாக அவரிடம் சொன்னான். அதையறிந்த பிரமாவானவர் 'தேவர்கட்கரசே! நீ பழைய குருவைக் காணுமளவும் அசுர குலத்துதித்த துவட்டாவின் மகனாகிய, மூன்றுதலைகளுள்ள, செய்கையிலும் அறிவிலும் மேலான, விச்சுவவுருவனைக் குருவாகக் கொள்வாயாக' என்று கூற, இந்திரன் அதற்கிசைந்து மலரவனைத் தொழுது விடைபெற்றுக்கொண்டுபோய் விச்சுவவுருவனைக் குருவாகக்கொண்டான். பிரமாவினுடைய ஆலோசனையையும் வஞ்சகனாகிய அசுரகுருவின் மாயத்தையும் தேறாத இந்திரன், அக்குருவைப்பார்த்து, ஒரு வேள்வி செய்யச் சொன்னான். அந்த அசுர குருவானவன் இசைந்து 'தேவர்களுக்கு ஆக்கம் உண்டாகுக' என்று வாயினால் சொல்லிக்கொண்டு 'அசுரர்களுக்கு ஆக்கம் உண்டாகுக' என்றுமனதில் நினைத்துக்கொண்டு கபடமாக யாகம்செய்ய ஆரம்பித்தான். அவனது வஞ்சகத்தை ஞானப்பார்வையால் அறிந்த தேவேந்திரன், வச்சிராயுதத்தால் அக்குருவின் தலைகள் மூன்றையும், காடையாகவும், ஊர்க்குருவியாகவும், சிச்சிலிக் குருவியாகவும் பறந்து போகும்படி தாக்கினான்.

உடனே பிரமகத்தி இந்திரனைப் பற்றிக்கொண்டது. அதனையறிந்த தேவர்கள் அப்பாவத்தை மரத்தின்மேலும், மண்மேலும், பெண்கள்மேலும், நீர்மேலும் புகுத்தினர்.

அப்பாவத்தை ஏற்றநால்வரும் இதைத் தீர்க்கும் விதம் எப்படியென்று தேவர்களைக் கேட்டனர். அதற்குத் தேவர்கள் நீரில் நுரையாகவும், மண்ணில் உவராகவும், பெண்களிடத்தில் சூதகமாகவும், மரத்தில் பிசினாகவும் போகக்கடவதென்றார்கள். பின் 'இந்தப் பழியைச் சுமந்ததினால் எங்களுக்கு என்ன பிரயோஜனம்' என்று நால்வரும் கேட்க, 'நீர் இறைக்குந் தோறும் அதிகமாக ஊறக்கடவது, மண்ணைத் தோண்டுங்குழி அம்மண்ணால் நிரம்பக்கடவது, பெண்கள் குழந்தை பெறுமளவும் கணவருடன் சேர்ந்து வாழக்கடவர், மரம்வெட்டினாலும் தழையக்கடவது' என்று ஒழியாத பிரயோஜனத்தைக் கொடுத்தார்கள்.

இந்திரன், பழிதீர்ந்து பிரகாசித்தான். விச்சுவவுருவனாகிய தன்மகனை இந்திரன் வச்சிராயுதத்தால் கொன்றுவிட்டதைத் துவட்டா என்பவன் தெரிந்து, பழிக்குப் பழி வாங்கக் கருதி, கொடிய யாகம் ஒன்று செய்தான். அதில் அக்கினிபோன்ற சிகையுடன், புகைநிறத்தோடு ஆரவாரித்து, கண்களில் தீப்பொறிபறக்க, பிறைபோன்ற பற்களைக் கடித்துக்கொண்டு, உலகமெல்லாம் செவிடுபட நகைத்து, கொடியவிடம்போல கையில் வாளேந்திய விருத்திரனென்னும் ஒருவீரன் தோன்றினான். துவட்டா என்பவன் அவனைப்

பார்த்து, ‘தேவேந்திரனைக்கொன்றுவா’ என்று அனுப்பினான். தேவேந்திரனானவன் அவ்விருத்திராசுரனுடன் கடும்போர்புரிந்து இளைத்து, பிரமலோகஞ் சென்று அயனிடம் தான்படுந் துயரத்தைச் சொல்ல, அயன் இந்திரனையழைத்துக்கொண்டு விண்டுவினிடம் சென்று வணங்கி, நடந்த விருத்தாந்தங்களைச் சொல்ல, விண்டுவானவர் இந்திரனை நோக்கி ‘விண்ணவர்க்கிறைவ! உன்னுடைய கையிலுள்ள வச்சிராயுத மானது மிகவும் பழையதாய்ப்போய்விட்டபடியால் பகைவரைக் கொல்ல வலிமையுடைய தன்று. ஆதலால் மற்றொரு புதிய வச்சிராயுதம் வேண்டும். அது பெறக்கூடிய வழியைச்சொல்லுவோம், கேட்பாயாக: முன்நாம் பாற்கடல் கடையுங்காலத்தில் அசுரர்களும் தேவர்களும் ஆயுதங்களுடன் வரக்கூடாது என்று இருதிறத்தார்களின் ஆயுதங்கள் எல்லாவற்றையும் ததீசி முனிவரிடம் சேர்ப்பித்தோம். நெடுநாள் சென்றும் தேவராவது அவுணராவது வந்து கேளாததினால் ததீசிமுனிவரானவர் அவ்வாயுதங்களை விழுங்கிவிட்டனர். அவைகள் எல்லாந்திரண்டு அவருடைய முதுகந்தண்டொடு சேர்ந்து விட்டன. அத் ததீசி முனிவரிடஞ் சென்று கேட்குமுன் அவர் கொடுத்துவிடுவார்’ என்று கூறினார். அதைக் கேட்ட தேவேந்திரன் தேவர் கூட்டத்தோடு ததீசி முனிவர் இருக்கும் இடம்போய்ச் சேர்ந்தான். ததீசி முனிவர் தம்மிடம் வந்த தேவர்களை அன்புடன் முகமலர்ந்து இனிமையான வார்த்தைகளால் உபசரித்து ‘நீங்கள் மிகவும் மெலிந்தவர்களாய் வந்திருக்கின்றீர்கள். அதற்குக் காரணம்யாது?’ என, இந்திரன் கூறுவான்: ‘சுவாமிகளே! தாங்கள் மறுக்காமல் கொடுக்கக்கூடிய ஒருபதார்த்தத்தை விரும்பி இத்தேவர்களோடும் வந்தேன். அது அவுணர்களைத் தொலைத்து எங்கள் குடியைக் காப்பாற்றக் கூடியது. அது உம்முடைய தேகத்தில் உள்ளது’ என்றான். உடனே, யாவையும் உணர்ந்த மகாதவசியாகிய ததீசிமுனிவர் சூரியனைக் கண்ட தாமரைமலர் போல முகமலர்ந்து கூறுவாராயினர்:

நாய்நம தெனநரி நமதெ னப்பிதா
தாய்நம தெனநமன் றனதெ னப்பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கை யாரதே.

விடம்பயி லெயிற்றா வுரியும் வீறுழை
குடம்பையுந் தானெனும் கொள்கைத் தேகொலா
நடம்பயில் கூத்தரி னடிக்கு மைவர்வா
முடம்பையும் யானென வுரைக்கற் பாலதோ

நடுத்தயா விலார்தமை நலியத் துன்பநோ
யடுத்தயா வருந்திரு வடைய யாக்கையைக்
கொடுத்தயா வறம்புகழ் கொள்வ னேயெனி
னெடுத்தயாக் கையின்பய னிதனின் யாவதே.

என்று சமாதிகூடி பிரமரந்திரத்தின் வழியாகக் கபாலத்தைக் கிழித்துக்கொண்டு போய் விமானத்தில் ஏறி சுவர்க்கம் அடைந்து வீற்றிருந்தார். இந்திரன் இவ்விதம் ததீசி முனிவர்கொடுத்த முதுகந் தண்டைத் தேவதச்சனால் வச்சிராயுதஞ் செய்து, மறுபடி விருத்திராசுரனை எதிர்த்து, பலவித ஆயுதங்களால் போர்செய்தும் வெல்ல முடியாமல், புதிய வச்சிராயுதத்தைக்கையில் எடுத்தான், அதுகண்ட விருத்திராசுரன்பயந்து கடலினுள்போய் ஒளித்துக் கொண்டான். இந்திரனும் கடலுள் விழுந்து தேடிக்காணாததினால், பிரமதேவரிடம் போய் நடந்த விவரங்களையெல்லாம் சொன்னான். பிரமதேவர் ஆலோசனை செய்து 'வானவர் இறைவனே! நீ இந்த விருத்தாந்தத்தை விந்தமலையை யடக்கிய அகத்திய முனிவரிடம் போய்ச் சொல்வாயாக' என்று அனுப்ப, இந்திரன் அகத்தியரிடம்போய் விண்ணப்பிக்க, அகத்தியர் சமுத்திரத்தை உழுந்தமிழத்தக்க அளவாகத் தமது கையிற் கொண்டு சாப்பிட்டுவிட்டார். சிவபெருமானுடைய அருளைப் பெற்றவர்களுக்கு இது ஒரு அதிசயமா! சிருட்டி திதி சங்காரம் முதலிய செயற்கருஞ் செய்கைகளைச் செய்ய வல்லவர்கள் அவர்களல்லவோ? தருமமல்லாத வழியில் சம்பாதிப்பவர்களுடைய செல்வம்போல் கடல் நீர்வற்றி, வடவாமுகாக்கினி எரிவதுபோலச் செம்மணிகளும்,அத்தி நீண்டு எரிதல்போல பவளக்காடும் விளங்கின. போரில் இளைத்துப்போன விருத்திராசுரன் அங்கொரு மலையில் மேகம்போல தேவர்கள் செய்த பாவம் ஒருருவெடுத்துத்தவஞ்செய்வது போல தவஞ்செய்து இருந்தான். இந்திரன் அவனைக்கண்டு வச்சிராயுதத்தால் அவன் தலையைக் கொய்தான். உடனே இந்திரனைப் பிரமகத்தி பிடித்துக் கொண்டது. அது உம்மென்னும், நெஞ்சைத்தட்டும், கோபித்தெழும்பும், ஆரவாரிக்கும், 'சண்டை செய்ய வா' என்னும், வாயை மடிக்கும், பற்களைக் கடிக்கும், விழும், எழுந்து ஓடும், திரும்பும், அழும, சிரிக்கும், சீறும். இவ்விதமாக, கணப்பொழுதாவது நீங்காமல் துன்பஞ்செய்தது. இந்திரன் பயந்து ஈசான்ய திக்கில் உள்ள ஒரு தடாகத்தில் தாமரைத்தண்டினுள்ளே ஒளித்துக் கொண்டான். அதனால் தேவலோகத்தின் அழகு குறைந்தது. அரசனில்லாத வறுமையை நோக்கிய தேவர்கள் எல்லாரும் பூமியிலே அஸ்வமேதயாகம் செய்துகொண்டிருந்த நகுடனென்பவனை அழைத்து வந்து அவனுக்கு முடிசூட்டி அரசனாக்கிக் கொண்டார்கள். தேவர்களுக்கரசனாக வந்த நகுடனென்பவன் தனது பக்கத்தில் இருந்தவர்களைப் பார்த்து 'இந்திராணியை இங்கேயழையுங்கள்' என்றான். அவர்கள்போய் அரசன் கருத்தை இந்திராணிக்குச்சொன்னார்கள். இந்திராணியானவள் புண்ணிய சொரூபரும் தமது குருவுமாகிய வியாழபகவானிடம் போய், 'எமது பரம குருவே! எனது நாயகன் இருக்கும்போதே மற்றொருவன் என்னைத்தனக்கு நாயகியாகக் கொள்ளல் தருமமாகுமோ?' என்று கேட்டாள். உடனே வியாழபகவான் தேவமாதர்களுக்கரசியே! மகரிஷிகள் ஏழு

பேர்தாங்க, தண்டிகையில் வந்தால் அவனே தேவர்களுக் கரசனாவான். உனது நாயகனும் ஆவான்' என்று சொன்னார். அவ்விதம் கூறிய குருவைவணங்கி அவர்சொல்லுக் கிசைந்த வளாய் விடைபெற்றுக் கொண்டுபோய் 'மாதவர் எழுவர் தாங்க சிவிகையேறி இங்கே வரக்கடவை' என்று நகுடனுக்குத்தூது அனுப்பினாள். நகுடன் அவ்விதம் சிவிகையேறிப்போகும்பொழுது சிவிகைதாங்கும் மகரிஷிகளை மதியாதவனாய், பின் தனக்குவரும் தீங்கைக்கவனியாதவனாய், விளைகின்ற காமத்தை அனுபவிக்கும் விருப்பத்தினால் விரைவாகச் செல்லும்பொருட்டு, அவர்களைப் பார்த்து, 'இந்திராணியிடத்தில் கொண்டுபோங்கள் சீக்கிரம்' என்ற அர்த்தம் விளங்க 'சர்ப்ப' என்றான். இதைக்கேட்டவுடன் சிவிகையின் முற்கொம்பு தாங்கி முன்னே நடக்கும் அகத்திய மகாமுனிவர் 'நீ சர்ப்பமாகக்கடவாய்' என்று சபித்தனர். உடனே மலைப்பாம்பாகி விட்டான். அறிவில்லாத அற்பர்களுக்குச் செல்வமே பகையாகும் அல்லவா? பின்பு தேவர்கள் தங்கள் குருவாகிய வியாழபகவானை அடிபணிந்து, 'எமது குருமூர்த்தியே! அரசனில்லாமையால் பொன்னுலகம் துன்பமடைகின்றது' என்றார்கள். குருவானவர்போய் இந்திரனையழைத்துக்கொண்டு வந்தார். இந்திரன் குருவை வணங்கி, 'ஐயனே! அடியேனை வருத்துகின்ற இப்பழி நீங்குதற்கு உபாயஞ் சொல்லவேண்டும்' என்றுகேட்டான். குருவானவர் 'இந்திரனே! இப்பழி பூமியில் அல்லாமல் தீராது. நீ வேட்டைக்குச் செல்பவன்போல் பூமிக்குவா' என்றார். கடவுளுக்குச் செய்த குற்றத்தை, குருஆலோசித்துத் தீர்த்துவிடுவார். குருவுக்குச்செய்த குற்றத்தைக் குருவே தீர்ப்பதல்லாமல் மற்றெவராலுந் தீர்க்கமுடியாது. இந்திரன் குதிரை மேலேறிக்கொண்டு குருவும் தேவர்களுஞ்சூழ, பூமியில்வந்து கயிலையங்கிரியை வணங்கி, கங்கை முதலிய அளவற்ற தீர்த்தங்களெல்லாம் போய்மூழ்கி, காசி, காஞ்சி, கேதாரம் முதலிய பலக்ஷேத்திரங்களைப் போய்ப் பணிந்தும் பழிவிடாமையால் துன்பமடைந்து, கிரகணசந்திரன்போல் ஒளிமழுங்கிய இந்திரன், கடம்பவனத்தருகே செல்லும் சமயத்தில், அதுவரை தொடர்ந்துவந்த பழி அவனைவிட்டகல, சமந்தபாரத்தை விடுத்தவன்போல அளவற்ற சந்தோஷமுடையவனாகி, குருவினிடம் சொல்ல, மாதவசிரேஷ்டராகிய வியாழபகவான் இந்திரனைப்பார்த்து, 'அப்பா! உயர்ந்ததலமும் உயர்ந்ததீர்த்தமும் இவ்விடத்தில் இருக்கின்றன. அவை நமக்குக்கிடைத்தல் வேண்டும். அடுத்து அறிவாயாக' என்று சொல்ல, உடனே சிலதூதரையனுப்பி, பார்த்துவரும்படி சொல்லிவிட்டு, அப்பால் நடக்கும் பொழுது, அருவியில்மூழ்கி அருவி எறிந்த இரத்தினத்தை எடுத்துப்பாறையில் வைத்து, நீரைத்தூவி மாலைசூட்டி பழங்களையூட்டி, மந்திகள்வழிபாடு செய்வதையும், மற்றோரிடத்தில் யாளியும் யானையும் துளைக்கைகளினால் நீரைமுகந்து ஒன்றுக்கொன்று ஊட்டி குடிப்பதையும், புலி தன்னுடைய தனப்பாலைப் புல்வாய்க்கன்றுக்குப் பசிதீரும்படி ஊட்

டுவதையும், பாம்பின் குட்டி வெயிலில் கிடந்து வருந்தி நெளிய கருடன் தனது சிறகைவிரித்து நிழல்பரப்ப, அதைப்பார்த்து மந்தி யானது 'ஆகாயத்தில் பறக்கக்கூடிய கருடன் பூமியில் சிறகைவிரித் துக்கொண்டிருப்பதைப்பார்த்தால் இதற்கு ஒருவியாதியணுகியிருக் குமோ' என்று கிருபையுடையதாகி, ஐயோ! என்று சொல்லிக் கொண்டு, சங்காகிய குடத்தில் அருவிநீரை முகந்துகொண்டுபோய்க் கருங்கையினால் பறவைமேல் சொரிவதையும், இன்னும் பல அற்புதங்களையும் கண்டு 'புளகாங்கிதத்துடன் மகிழ்ச்சியுள்ள மனத்துடன் போகும் பொழுது தூதர்கள் எதிரே வந்து வணங்கி, 'எம்மரசே! எங்குங்காணாத அதிசயம் இக்கடம்ப வனத்தில்கண்டு சந்தோஷக்கடலில் மூழ்கினோம். அற்புதமான தடாகத்தின் அருகில் கடம்பமரநிழலில் சோதிவடிவாய் முளைத்த சிவலிங்கம் ஒன்று இருக்கிறது' என்றுசொல்ல இந்திரன்கேட்டான்.

செவித்துளைபி லமுதொழுக்கும் உரைபரொடும் வழிக்கொண்டு
சென்னி மேற்கை
குவித்துளமெய் மொழிகாணக் குணமூன்று மொன்றித்தன்
கொடிய பாசம்
அவித்துளயர் வொழிக்கமுளைத் தருள்குறிமேல் அன்பீர்ப்ப
அடைவான் கானங்
கவித்துளபூந் தடம்படிந்து கடம்பவனத் துழைநுழைந்தான்
கவலை தீர்வான்.

அருவாகி யுருவாகி யருவுருவங் கடந்துண்மை
யறிவா னந்த
வுருவாகி யளவிறந்த வுயிராகி யவ்வுயிர்க்கோர்
உணர்வாய்ப் பூவின்
மருவாகிச் சராசரங்கள் அகிலமுந்தன் னிடையுதித்து
மடங்க நின்ற
கருவாகி முளைத்தசிவக் கொழுந்தையா யிரங்கண்ணுங்
களிப்பக் கண்டான்.

கண்டு, விழுந்து, எழுந்து, கண்களில் நீர்சொரிய, சந்தோஷக்கட லில் மூழ்கி, நாவுகுழற, உடல்நடுங்க, அன்பே உருவமாகி, சொக் கலிங்கப்பெருமானுக்கு அருச்சனை செய்யவேண்டிய பூசைத்திரவி யங்களையெல்லாம் தெய்வலோகத்திற்போய்க்கொண்டுவரும்படி சில தேவரையனுப்பிவிட்டு,தேவதச்சனைப்பார்த்து ஒருவிமானம் அமைக் கும்படி உத்தரவுசெய்து அனுப்பிவிட்டு, தடாகத்திற் போய்ப்பார் த்து அர்ச்சனைக்குப் புட்பமில்லாதிருப்பதினால் துன்புற்றான். பின்பு அத்தடாகத்தில் சொக்கலிங்கப்பெருமான் கிருபையால் பல சூரி யர்கள் ஒருசமுத்திரத்தில் முளைத்திருப்பதுபோல அழகிய தாமரை மலர்கள் பூத்திருக்கக்கண்டான். அன்பு அதிகரிக்க மகிழ்ந்து ஆடி

னான். அத்தடாகத்திற்குப் ‘பொற்றாமரை’ என்று பெயரிட்டு, அதில் ஸ்நானஞ்செய்து, தாமரைப்புஷ்பங்களைக்கொய்துகொண்டு, சொக்கலிங்கப்பெருமானிடம் வந்து, சுற்றி மறைத்திருந்த மரங்களையெல்லாம் வெட்டி நிலத்தைத்திருத்தி வரும்பொழுது சிவலிங்கத்தின் முடிமீது சூரியகிரணம் பட வருந்தி, தன் சந்திரவட்டக்குடையைக் கொண்டு நிழல்செய்ய எத்தனிக்கையில், சூரியமண்டலம்போல் ஒரு இரத்தின விமானம் வந்துவிட்டது. எட்டு யானைகளும் முப்பத்திரண்டு சிங்கங்களும் அறுபத்துநாலு சிவகணங்களும் தாங்க எட்டுத் திசைகளிலும் ஒளிவீச தேவதச்சன் செய்துகொடுத்த அந்த விமானத்தைச்சாத்தி இந்திரனானவன் பஞ்சபூதம், சந்திரசூரியர், ஆன்மா என்னும் எட்டுத்திருவுருவப்பரஞ்சுடராகிய சிவலிங்கப்பெருமானை, தெய்வலோகத்திலிருந்து வந்த திரவியங்களினால் அபிஷேக ஆடை ஆபரண அலங்கார தூப தீப சோடசோபசாரங்களால் பூசித்து, பணிந்து, வலம்வந்து, கும்பிட்டு, நடனஞ்செய்து, ஆனந்தக்கண்ணீர் சொரிய அன்புமேலீட்டால் சிரமேல் கைகுவித்து,

அங்கணா போற்றி வாய்மை யாரணா போற்றி நாக
கங்கணா போற்றி மூல காரணா போற்றி நெற்றிச்
செங்கணா போற்றி யாதி சிவபரஞ் சுடரே போற்றி
யெங்கணா யகனே போற்றி யீறிலா முதலே போற்றி.

யாவையும் படைப்பாய் போற்றி யாவையுந் துடைப்பாய் போற்றி
யாவையு மானாய் போற்றி யாவையு மல்லாய் போற்றி
யாவையு மறிந்தாய் போற்றி யாவையு மறந்தாய் போற்றி
யாவையும் புணர்ந்தாய் போற்றி யாவையும் பிரிந்தாய் போற்றி.

இடருறப் பிணித்த விந்தப் பழியினின் றென்னை யீர்த்துன்
அடியிணைக் கன்ப னாக்கு மருட்கடல் போற்றி சேற்கண்
மடவாள் மணாள போற்றி கடம்பமா வனத்தாய் போற்றி
சுடர்விடு விமான மேய சுந்தர விடங்க போற்றி.

பூசையும் பூசைக் கேற்ற பொருள்களும் பூசை செய்பு
நேசனும் பூசை கொண்டு நியதியிற் பேறு நல்கு
மீசனு மாகிப் பூசை யான்செய்தே னெனுமென் போத
வாசனை யதுவு மான மறைமுத லடிகள் போற்றி

என்று தோத்திரம் செய்தான். அடியவர் வேண்டுவதைக் கொடுத்தருளும் பழம் பொருளாகிய சொக்கலிங்கப் பெருமான் வெளிப்பட்டு, புன்னகையுடன் அருட்கண்ணால் பார்த்து ‘நீ விரும்பியது எது சொல்’என்றார். தேவர்கோன் விரைவில் வணங்கிசிரமேல் கைகூப்பி ‘எம்பெருமானே! நீர் வீற்றிருக்கும் எல்லைக்குச் சமீபித்த உடனே பிரமகத்தியும் அடியேன் முன் செய்த வினையும் கெட்டு உம்முடைய மலரடி தோத்திரஞ்செய்து பூசைசெய்யவும் உரியவனா

னேன். இதைப்பார்க்கிலும் நான் பெறவேண்டியது என்ன இருக்கின்றது? இன்று பூசித்ததுபோல் உம்முடைய பாதகமலங்களை என்றும் பூசித்து உமது அடியார்களுள் யானும் ஒருவனாவதே அடியேன் வேண்டத்தக்கது' என்று திருவடியில் வீழ்ந்து தொழுதான். சோமசுந்தரக்கடவுள் 'அன்பனே! இருதுகளுள் சிறந்த வசந்தருதுவும், மாசங்களுள் சிறந்த சித்திரை மாசமும், நக்ஷத்திரங்களுள் சிறந்த சித்திரை நக்ஷத்திரமும், திதிகளிற் சிறந்த பௌர்ணிமாதிதியும் கூடும் சித்திரைச் சித்திரை தோறும் வந்து வந்து நம்மைப் பூசிப்பாயானால் முந்நூற்றறுபத்தைந்து நாளும் பூசித்த பிரயோசனங்கிடைக்கும். நீ சுவர்க்கஞ் சென்று பல போகங்களுடன் வாழக்கடவை. அதன்மேல் மலபரிபாகம் உண்டாக, பிரமா விட்டுணு முதலிய தேவர்களுடைய பதங்களிலும் பிறவற்றிலும் ஆசை நீங்கும். அப்பொழுது உனக்குச் சாயுச்சியம் தருவோம்' என்று திருவாய் மலர்ந்து விடைகொடுத்து இலிங்கத்தில் மறைந்தருளினார். இந்திரன் உடம்பெங்கும் புளகங்கொள்ள, தலையின்மேல் கைகளைக் குவித்தான், அடியற்ற மரம்போல வீழ்ந்தான், எழுந்து ஆனந்தக் கண்ணருவி சொரிய நின்றான், பலமுறை துதித்துக் கூத்தாடினான், பின் இலிங்கத்தின் சமீபத்திலிருந்து சிவபெருமானை இருதயகமலத்திலே தியானித்து, பஞ்சாக்ஷரத்திலே நூற்றெட்டுருச் செபித்து, செபத்தையும் கன்மங்களையும் தன்னையும் நிவேதித்து, குருவைப் பூசித்து, 'குற்றத்தைப் பொருத்தருளும்' என்று பிரார்த்தித்துப் பூசையை முடித்து, சிவபெருமானுடைய திருவடிகளைப் பிரியமுடியாமல்வருந்தி, திருவருள் ஆணைக்கு அஞ்சி, சுவர்க்கத்தை யடைந்து, சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளைச் சிறிதும் மறவாத சிந்தையுடன் முன்போல அரசு செய்துகொண்டிருந்து சித்திரைச் சித்திரைதோறும் வந்து சோமசுந்தரக் கடவுளைப் பூசித்தான்.

---

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் திருவடி வாழ்க.

---

## மதுரைத் திருப்புகழ்.

பாவுநெடுங்கதி ருலகில்நெருங்கிய பவனிவரும்படி யதனாலே
பகரவளங்களு நிகரவிளங்கிய இருளைவிடிந்தது நிலவாலே
வரையினி லெங்கணும் உலவிநிறைந்தது வரிசைதரும்பதம் அதுபாடி
வளமொடுசேர்தமிழ் உரைசெயஅன்பரு மகிழவரங்களும் அருள்வாயே
அரஹரசுந்தர அறுமுக என்றுனி அடியர்பணிந்திட மகிழ்வோனே
அசலநெடுங்கொடி யுமையமைதன்சுத குறமகளிங்கித மணவாளா
கருதருதிண்புய சரவணகுங்கும களபமணிந்திடு மணிமார்பா
கனகமிகும்பதி மதுரைவளம்பதி யதனில்வளர்ந்தருள் பெருமானே

---

## தாயுமானவர் பாடல்.

ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனுள்
அசரசர பேதமான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை
யாதிநூ லையும்வகுத்துச்
சைவமுத லாவளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்தமோன
சமரசம் வகுத்தநீ உன்னைநா னணுகவும்
தண்ணருள் வகுக்கிலையோ
பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யரறிவிற்
போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்றபொருளே
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.


அன்பர்களே!

தமிழிலும், இங்கிலீஷிலும் எவ்வித அச்சு வேலைகளும் இலக்கணப்பிழையில்லாமல் குறைந்த சார்ஜுக்குச் செய்து கொடுப்பதுடன், எவ்விதப் பயிண்டு வேலைகளும் நேர்த்தியாகவும் சகாயமாக வும் செய்து கொடுக்கக்கூடும். அநேக அன்பர் கள் எங்களிடம் வேலைகள் கொடுத்துத் திருப்தி யடைந்துவருகிறார்கள். ஆகையால் தங்கள் வேலை களையும் தங்களிஷ்டர்களுடைய வேலைகளையும் இந்த ஆபீசுக்கு அனுப்பிவைக்கவேண்டுகிறேன்.

இங்ஙனம் தங்களன்புள்ள

தேவாரபாராயணம் அ. முத்துச்சாமி பிள்ளை,

மானேஜிங் புரோப்ரைட்டர்,

**மீனலோசனி**

# அச்சியந்திரசாலை,

தெற்குக்கோபுரவாசல் தெரு, மதுரை.